**நுவரஎலிய மா நகர சபை**

**நுவரஎலியா மாவட்டம்**

-----------------------------------------

## 1. நிதிக்கூற்றுக்கள்

-----------------------------

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

----------------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017ஜுன் 13ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016மே 23 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், மீளாய்வாண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2016 செப்தெம்பர் 27 ஆந் திகதி ஆணையாளருக்கு அனுப்பப்பட்டிருந்தது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தை தவிர்த்து நுவரஎலிய மாநகர சபையின் 2016 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமை மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அவற்றின் நிதிச் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையான மற்றும் நியாயமான நிலைமை ஒன்றினை வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்

### 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

-------------------------------------------------------------

#### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டினுள் காணி பரிமாற்றல் கட்டண அறவீடுகள் ரூபா 20,348,142 ஆக இருந்த போதிலும் ரூபா 19,582,142 தொகை கடன்பட்டோர் செலவு வைக்கப்பட்டு ரூபா 766,000 வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. பின்னர் செலுத்த வேண்டிய முத்திரைக் கட்டண வரியாக ரூபா 766,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் அக்கொடுப்பனவிற்குரிய பணம் சபைக்கு கிடைத்திருக்கவில்லை. இதன் காரணமாக முத்திரைக் கட்டண வருமானக் கடன்பட்டோராக ரூபா 766,000 கூடுதலாகவும் அறவிடப்பட வேண்டிய முத்திரை வரி மீதி குறைத்து நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 64,500 பெறுமதியான 10 சுழலும் கதிரைகள், இயந்திங்கள் மற்றும் உபகரணங்களின் கீழ் காண்பிக்கப்பட்டிருந்தமையால் அத்திகதியில் இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களின் பெறுமதி அப்பெறுமானத்தினால் கூடுதலாகவும் தளபாடங்களும் பொருத்திகளின் பெறுமதி குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(இ) சபைக்கு 2015 ஆம் ஆண்டின் போது நன்கொடையொன்றாக கிடைத்திருந்த கொமட்சு வகையான எஸ்கவேட்டர் இயந்திரத்தின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(ஈ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு முன்கொண்டு வரப்பட்ட நீர்க்கட்டணங்கள் நடைமுறைப்பொறுப்பின் கீழ் கணக்கீடு செய்யப்படாமல், அததிகதியில் கிடைக்க வேண்டிய நிலுவைக் கட்டணங்களுக்கு ஈடுசெய்யப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. அவ்வாறே முன்கொண்டு வரப்பட்ட நீர்க் கட்டண அளவு கணக்கிடப்பட்டிருக்கவில்லை.

(உ) 2015 ஆம் ஆண்டின் போது மீள்நிரப்பல் அடிப்படையில் செலுத்தப்பட்டிருந்த ரூபா 462,747 ஆன தேர்தல்கள் கடமைக் கொடுப்பனவு தேர்தல்கள் ஆணையாளரிடம் பின்னர் மீள்நிரப்பபட்டிருந்த போதிலும் அத்தொகை மீளாய்வாண்டில் செலுத்த வேண்டிய வைப்புக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டமையால் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு மீளச் செலுத்த வேண்டிய வைப்புக் கணக்கிலும் பெறவேண்டிய மீள்நிரப்பல் அடிப்படையில் கொடுப்பனவுக் கணக்கின் மீதி ரூபா 462,747 வீதம் கூடுதலாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஊ) சபைக்குரிய சந்ததென்ன பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் மீள் சுழற்சி நிலையத்திற்காக மத்திய சுற்றாடல் அதிகாரசபையிடமிருந்து 2015 ஒக்தோபர் 03 ஆந் திகதி வழங்கப்பட்டிருந்த 02 பிளாஸ்ரிக் அரைக்கும்இயந்திரங்களின் பெறுமதி கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

(எ) மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பூர்த்தி செய்யப்பட்டு அல்லது பட்டியல் சமர்ப்பிக்கப்படாத 2015 ஆம் ஆண்டிற்குரிய 5 நிர்மாண வேலைகளின் மதிப்பிடப்பட்ட செலவினமான ரூபா 2,128,000 தொகை கடன்கொடுத்தோரின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருந்தமையால் மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன்கொடுத்தோர் அப்பெறுமானத்தினால் கூடுதலாகவும் திரண்ட நிதியம் அப்பெறுமதியால் குறைத்தும் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது.

(ஏ) தனியார் வங்கியொன்றில் பேணிச்செல்லப்படும் நடைமுறைக் கணக்கொன்றிற்குரித்தாக 2015 ஆம் ஆண்டிற்காக ரூபா 10,960 தொகையும் 2016 ஆம் ஆண்டிற்காக ரூபா 11,213 என அறவிடப்பட்டிருந்த ரூபா 22,173 தொகையான வங்கிக் கட்டணங்கள், செலவினத்தின் கீழ் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே இவ்வங்கிக் கணக்கிற்கு மீளாய்வாண்டில் சனவரி மாதம் செலவு வைக்கப்பட்டிருந்த ரூபா 29,586 தொகை இனங்காணப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.2 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெறவேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 1 ஆண்டு முதல் 2 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த பெறவேண்டிய 04 கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 3,132,827 அறவிடப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு 01 ஆண்டு முதல் 09 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலம் கடந்திருந்த ரூபா 60,021,736 ஆன செலுத்த வேண்டிய 08 கணக்கு மீதிகள் தீர்வுசெய்யப்பட்டிருக்கவில்லை.

**1.3.3 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை**

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்த ரூபா 818,193 தொகையான 03 கணக்கு விடயங்களின் விபரமான பட்டோலைகள் சமர்ப்பிக்கப்படாமையால் கணக்காய்வின் போது திருப்திகரமாக சான்றுறுதி செய்வதற்கு முடியாதிருந்தது.

**1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணக்கமின்மைகள்**

கீழே காட்டப்பட்டுள்ள சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மை சந்தர்ப்பங்கள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணங்கள் | |
| (i) நி.பி 371(2) | கட்டுநிதியொன்று அது வழங்கப்பட்ட அச்செயற்பாடு முடிவடைந்தவுடனேயே தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2014- 2016 ஆண்டு காலப்பகுதியில் 23 சந்தர்ப்பங்களில் வழங்கப்பட்ட ரூபா 1,776,309 ஆன கட்டுநிதி மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நி.பி 371(2)(இ) | கட்டுநிதியொன்று பதவிநிலை தர நிலையிலுள்ளவர்களுக்கு மாத்திரம் வழங்கக் கூடியதாக இருந்த போதிலும், மீளாய்வாண்டில் பதவிநிலைத்தரமல்லாத உத்தியோகத்தர்களுக்கு 16 சந்தர்ப்பங்களில் ரூபா 4,431,647 செயல்நிமித்த கட்டுநிதி வழங்கப்பட்டிருந்தன. |
| (ஆ) திறசேரி செயலாளரின் 2015யூலை 14 ஆந் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதிச் சுற்றறிக்கை | செயல்நிமித்த கட்டுநிதி ஒரு தடவையில் ரூபா 100,000 ஆக இருந்த போதிலும் 3 சந்தர்ப்பங்களில் ரூபா 873,261 தொகை அந்த எல்லையை விஞ்சி வழங்கப்பட்டிருந்தது. |
| (இ) 1988 இன் மே 17 ஆந் திகதிய 1988/22 ஆம் இலக்க உள்ளூராட்சி மன்ற ஆணையாளரின் சுற்றறிக்கை | வீதவரிக்காக ஆதனங்கள் 05 ஆண்டுகளுக்கு ஒரு முறை குத்தகை திருத்தப்பட வேண்டிய போதிலும்,2007 ஆம் ஆண்டின் பின்னர் வீதவரி ஆதனங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 292,610,584 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினை விஞ்சிய வருமானம் ரூபா 119,417,462 ஆகக் காணப்பட்டமையால் நிதி விளைவுகளில்ரூபா 173,193,122ஆன முன்னேற்றமொன்று காணப்பட்டது.

**2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு**

-----------------------------------------------------------------

நிதி விளைவுகளில்ரூபா 173,193,122 இனால் அதிகரித்திருந்தமைக்கு 6 வருமான விடயங்களில் அதிகரிப்பு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

**2.3 வருமான நிருவாகம்**

-----------------------------------

**2.3.1 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை**

-------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 15,663,051 ஆன நிலுவைக் கடை வாடகையிலிருந்து ஆண்டில் ரூபா 4,907,552 அதாவது 31 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது. அவ்வாறே மீளாய்வாண்டின் ஆரம்பத்தில் காணப்பட்ட ரூபா 18,903,045 ஆன நிலுவை வாடகை மற்றும் கட்டணங்களிலிருந்து ஆண்டினுள் ரூபா 2,651,229 அதாவது 14 சதவீதம் மாத்திரம் அறவிடப்பட்டிருந்தது.

**2.3.2 வீத வரி**

---------------

மீளாய்வாண்டு திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 65,408,453 ஆன வீதவரி அறவிடப்பட வேண்டியிருந்த போதிலும் அத்தொகையை அறவீடு செய்வதற்காக மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 252 ஆம் பிரிவின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**2.3.3 நீதிமன்றத் தண்டப் பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்**

-----------------------------------------------------------------------------------------------

மாகாண சபையின் பிரதம செயலாளரிடமிருந்தும் ஏனைய அதிகாரத் தரப்பினரிடமிருந்தும் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நீதிமன்றத் தண்டப் பணமாக ரூபா 1,059,915 தொகையும் முத்திரைக் கட்டணமாக ரூபா 23,923,690 தொகையும் அறவிடப்பட வேண்டியிருந்தது.

**2.3.4 மிகை விதிப்புக்கள்**

---------------------------------

மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் (அதிகாரம் 252) 226(1) உப பிரிவின் ஏற்பாடுகளின் கீழ் பொறுப்புச் சொல்ல வேண்டிய நபர்களுக்கு எதிராக என்னால் விதிக்கப்பட்ட மிகை விதிப்புக்களின் பிரகாரம் மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த மிகை விதிப்புக்களின் பெறுமதி ரூபா 731,915 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவத் திறமையின்மை

(அ) 2015 ஆம் ஆண்டில் 07 மாதங்களுக்காக மாநகர சபைக்குச் சொந்தமான பொது மலசலகூடங்களை குத்தகைக்கு வழங்கியதால் அறவிடப்பட வேண்டிய ரூபா 851,222 அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2012 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் 06 மாநகர உறுப்பினர்களுக்கு சபை நிதியத்திலிருந்து செலவிடப்பட்டு வழங்கப்பட்டிருந்த ரூபா 429,720 பெறுமதியான 10 கையடக்க தொலைபேசிகளை சபையின் பதவிக்காலம் முடிவடைந்து இருந்த போதிலும் சபைக்கு மீளப்பெற்றுக்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையின் அதிகாரப் பிரதேசங்களில் வாடகை வாகனங்களாக ஓட்டத்தில் ஈடுபடும் முச்சக்கர வண்டிகளிலிருந்து கட்டணங்களை அறவிடுவதற்காகவும் ஒழுங்குபடுத்துவதற்காகவும் துணை விதிகள் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை.

(ஈ) சபைக்குரிய ஹாவாஎலிய தெனிய பெரெக் லேன் இல் அமைந்துள்ள 08 ஏக்கர், 01 ரூட்,07 பேர்ச் அளவிலான காணி,தனியார் நிறுவனமொன்றுக்கு குத்தகைக்கு வழங்கியதற்காக 2015 யூலை 31 முதல் 2016 ஒக்தோபர் 31 வரையான 15 மாதங்களுக்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 2,787,500 தொகை அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.2 சர்ச்சைக்குரிய தன்மையிலான கொடுக்கல் வாங்கல்கள்

(அ) 2016 சனவரி 29 ஆந் திகதி ஒலிப்பதிவு செய்யும் இயந்திரங்கள் இரண்டினை கொள்வனவு செய்வதற்காக ரூபா 40,000 முற்பணம்மாநகர ஆணையாளருக்கு வழங்கப்பட்டிருந்த போதிலம் 2017 ஆகஸ்ட் 14 ஆந் திகதி வரையிலும் இவ்வியந்திரங்கள் களஞ்சியத்திற்கு கிடைத்தோ அல்லது முற்பணம் தீர்க்கப்பட்டோ இருக்கவில்லை.

(ஆ) சபைக்குரிய விக்டோரியா பூங்காவிற்கு கொங்கிரீட் வாங்குகளை கொள்வனவு செய்வதற்கு முற்பணமாக ரூபா 100,000 மற்றும் வழங்குனருக்கு நேரடியாக ரூபா 86,880 என ரூபா 186,880 செலுத்தப்பட்டிருந்த போதிலும் அதில் ரூபா 86,880 இற்காக 18 வாங்குகள் கொள்வனவு செய்யப்பட்டிருந்தன. எனினும் ரூபா 100,000 முற்பணம் தீர்க்கப்படாதிருந்ததுடன் கொள்வனவு செய்யப்பட்ட வாங்குகளில் ரூபா 38,640 பெறுமதியான 08 வாங்குகள் உடைந்திருந்தன.

(இ) பிடியாணைக் கட்டணங்களாக ரூபா 464,949 தொகையும் வரிச் சலுகையாக ரூபா 31,779 என தனியார் நிறுவனமொன்றிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 496,728 தொகை முறையான அங்கீகாரமொன்று இல்லாமல் பதிவழிக்கப்பட்டிருந்தது.

**3.3 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

-----------------------------------------------------

(அ) 2015 ஒக்தோபர் மாதம் சபைக்குச் சொந்தமான வாகனமொன்றின் யன்னல் கண்ணாடி உடைந்தமையால் ரூபா 127,000 ஆன நட்டமொன்று தொடர்பாக இலங்கை அரசின் நிதிப் பிரமாணம் 104 இன் பிரகாரம் பரிசோதனை நடாத்தப்பட்டு பொறுப்பானவர்கள் இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) சனாதிபதி செயலாளரின் 2015 யூலை 05 ஆந் திகதிய சீஎஸ்ஏ/1/1/83 ஆம் இலக்க கடிதத்தின் மூலம் உள்ளூராட்சிமன்ற நிறுவனங்களின் நிதியினைப் செலவுசெய்து மேற்கொள்ளப்படும் வெளிநாட்டுச் சுற்றுலாக்களை உடனடியாக இடைநிறுத்துமாறு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் மாநகர சபையின் 06 உறுப்பினர்கள் 2016 மே மாதம் யப்பானில் நடைபெற்ற நகர நிகழ்ச்சித்திட்ட விழாவொன்றிற்கு சமூகமளிப்பதற்காக சபை நிதியத்திலிருந்து ரூபா 918,825 தொகை செலவிடப்பட்டிருந்தது.

(இ) தேவைப்பாட்டினை சரியாக இனங்காணாமல் கொள்வனவுஇடம்பெற்றமை காரணமாக 2011 ஆம் ஆண்டில் ஒன்று ரூபா 1,950 வீதம் ரூபா 429,000 பெறுமதிக்குகொள்வனவு செய்யப்பட்டிருந்த 220 மழை அங்கிகளை, களஞ்சியங்களில் இடநெருக்கடிகளை தவிர்ப்பதற்காக 2017 ஆம் ஆண்டின் போது ரூபா 28,500 இற்கு ஏலத்தில் விற்பனை செய்யப்பட்டிருந்தமையால் சபை நிதியத்திற்கு ரூபா 400,500 ஆன நட்டமொன்று இடம்பெற்றிருந்தது.

**3.4 சுற்றாடல் சிக்கல்கள்**

----------------------------------

தபால் திணைக்களத்தின் ஊழியர் விடுதி மலசலகூடங்களின் கழிவுகளை முறையற்ற விதத்தில் சுற்றாடலுக்கு விடுவிக்கப்பட்ட வந்த போதிலும் 1989 சனவரி 20 ந் திகதிய 541/17 ஆம் இலக்க மாநகர சபை துணை விதியின் X ஆம் பிரிவின் 01 முதல் 10 ஆம் பிரிவுகள் பிரகாரம் அந்நிலைமையை தவிர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 ஜுன் 13 ஆந் திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 மே 23 ஆந் திகதியும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன்,

### 4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு

மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டின் படி மதிப்பிடப்பட்ட வருமானம் மற்றும் செலவினங்கள், உள்ளவாறான வருமானம் மற்றும் செலவினங்களுடன் ஒப்பீடு செய்யும் போது 07 வருமான விடயங்களில் 10 சதவீதம் முதல் 86 சதவீதம் வரையும் 06 செலவு விடயங்களில் 12 சதவீதம் முதல் 73 சதவீதம் வரையும் விலகல் அவதானிக்கப்பட்டமையால் பாதீடு ஆக்கபூர்வமாக கட்டுப்பாட்டு கருவி ஒன்றாகப் பயன்படுத்தப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) வருமான நிர்வாகம் | நிலுவை வருமானங்கள் அறவிடப்படாமை. |
| (ஆ) கடன்பட்டோர்/ கடன் கொடுத்தோர் நிர்வாகம் | அறவிடப்பட வேண்டிய பணத்தை அறவீடு செய்யாமை மற்றும் செலுத்த வேண்டிய தொகைகளை தீர்வு செய்யாமை. |
| (இ) கணக்கீடு | வருமானம் மற்றும் செலவினங்களை கணக்கீடு செய்யும் போது பல்வேறு குறைபாடுகள் காணப்பட்டமை. |